*கவனிக்க.- 2018.12.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2102 - 2018 දෙසැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2018.12.14

*2102 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2019, சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B81477 - 5,403 (2018/12)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி அமையங்களில் தீயணைப்புச் சேவையில் நிலவும் தீயணைப்புப் படையினரது அலுவலர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2018

1. மத்திய மாகாணத்தின் பின்வரும் மாநகர சபைகளது தீயணைப்பு அலகுகளில் நிலவும் தீயணைப்புப் படையினது அலுவலர் பதவி வெற்றிடங்களுக்கென மத்திய மாகாணத்தை நிரந்தர விதிவிடமாகக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
   (i) கண்டி மாநகர சபை
   (ii) மாத்தளை
   (iii) நுவரெலியா
   (iv) தம்புள்ள

2. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை/அரசாங்கம் அறிவிப்புச் செய்யும் ஓவ்வூதிய முறைமைக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

3. **சம்பள அளவுத் திட்டம் :**

   பொ.நி.சு. 03/2016, RS1- 2016 பொது நிருவாகச் சுற்றுநிருபம் 03/2016 அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

   சம்பள அளவுத்திட்டம் : ரூ. 29,540-7X300-27X370 - ரூபா 41,630.

4. **வயதெல்லை :**

   18 வயதுக்குக் குறையாதவராகவும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல். (ஏற்கனவே மத்திய மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

5. **அடிப்படைத் தகைமைகள் :**

   5.1. கல்வித் தகைமைகள் :

   சிங்களம்/தமிழ்/கணிதம், விஞ்ஞானம் உட்பட 06 பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். அவற்றுள் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

   5.2. ஏனைய தகைமைகள் :-

   1. (அ) சிறந்த நன்னடத்தையையும் நல்ல தேகாரோக்கியத்தையும் கொண்டிருப்பதுடன் அவர்கள்,

   (i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
   (ii) மத்திய மாகாணத்துக்குள் குறைந்தது தொடரான 03 வருடகால வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்
   (iii) ஆகக்குறைந்தது 5 அடி 4 அங்குல உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (iv) ஆகக்குறைந்தது 56 கிலோ கிராம் நிறையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (v) மார்பளவு 32 அங்குலத்துக்குக் (வெளிச்சுவாச நிலை) குறையாது இருத்தல் வேண்டும்.
   (vi) விண்ணப்பதாரி திருமணம் செய்யாதவராக இருத்தல் வேண்டும்.
   (vii) கனரக வாகனங்களைச் செலுத்தும் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு : மேற்குறித்த தகைமைகளை நேர்முகத் தேர்வின்போது நீங்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) தீயணைப்புப் பயிற்சி பற்றிய பாடநெறியொன்றைப் பயின்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

   5.3. உடல் மற்றும் உளத் தகைமைகள் :

   சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டுள்ளவரென அரசாங்கம் அங்கீகரித்த மருத்துவச் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை :**

   (i) உள்ளூராட்சி ஆணையாளரால் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டு, எழுத்துப் பரீட்சையொன்றை நடாத்தி, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரிலிருந்து இருமடங்கு தொகையினர் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு, உடற் தகைமைத் தேர்வில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு/செயன்முறைத் தேர்வுக்கான தகுதியைப் பெறுவர். தகைமைகளைப் பரிசீலித்த பின்னர் அதியுயர் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**ஆட்சேர்ப்புக்கான எழுத்துப் பரீட்சை :**

(அ) பொது அறிவையும் பொது உளச்சார்பையும் பரீட்சிப்பதற்கென 100 புள்ளிகள் வழங்கப்படும் 01 மணி நேர வினாப் பத்திரமொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். 40 புள்ளிகளுக்கு மேல் பெறும் விண்ணப்பதாரிகள் சித்தியடைந்தோராகக் கொள்ளப்படுவர்.

| | |
|---|---|
| பொது அறிவு | உள்நாட்டு, வெளிநாட்டு மட்டத்தில் முக்கியத்துவம் பெறும் நடைமுறை விடயங்கள் பற்றிய விண்ணப்பதாரியின் அறிவை அளவிடுதல் |
| பொது உளச் சார்பு | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான மற்றும் தீர்மானித்தல் ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமையை அளவிடுதல் |

உடற்தகைமைப் பரிசோதனை :

(ஆ) உடற் தகைமையைப் பரிசோதிப்பதற்கெனப் பின்வரும் அம்சங்கள் பரிசீலிக்கப்படும்

| நிகழ்ச்சி | இயலுமையை அளவிடும் முறைமை |
|---|---|
| 800 மீற்றர் தூர ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் | நேரத்தை அளவிடுதல் |
| 100 மீற்றர் தூர ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் | நேரத்தை அளவிடுதல் |
| Shuttle Run | நேரத்தை அளவிடுதல் |
| Sit up Exercise | 02 நிமிட நேரத்தில் உச்ச அளவு |
| Dips | 02 நிமிட நேரத்தில் உச்ச அளவு |
| கயிற்றின் உதவியுடன் 15 மீற்றர் உயரத்தில் ஏறுதலும் இறங்குதலும் | நேரத்தை அளவிடுதல் (கயிற்றில் ஏறி இறங்கும் தொழினுட்ப முறைக்கு அமைய) |
| 60-100 அடி அளவான ஏணியில் ஏறுதலும் இறங்குதலும் | நேரத்தை அளவிடுதல் |
| Drop Stick | எதிர்வினை காட்டுதல் |

உடற்தகைமையை அளவிடும் தேர்வின்போது விண்ணப்பதாரிகள் எதிர் கொள்ளும் காயங்கள் மற்றும் விபத்துகள் தொடர்பில் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன், அதுபற்றிய உடன்பாடு ஒன்றைக் குறித்த தேர்வுக்கு முன்னர் முன்வைத்தல் வேண்டும்.

(ii) நேர்முகத் தேர்வு/செயன்முறைத் தேர்வு

உள்ளூராட்சி ஆணையாளரால் நியமனம் செய்யப்படும் தேருநர் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும்.

7. **ஏனைய சேவை நிபந்தனைகள் :-**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஒருவருடப் பாடநெறியைப் பயிலுதல் வேண்டும். பயிற்சிக் கால எல்லைக்குள் கருமங்களும் நடத்தையும் திருப்தியற்றதாக இருக்கும் அல்லது எதிர்பார்க்கும் தொழிற் தரத்தை அடைய இயலாத பயிலுநர்களை எந்தவித நட்டஈடுமின்றிப் பயிற்சியிலிருந்து நீக்கிவிட நியமன அதிகாரிக்கு முடியும்.

பயிற்சிக் காலத்தில் மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 15,000.00 வழங்கப்படும்.

பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் பயிலுநர்கள் மத்திய மாகாண சபையின் அரச சேவையின் தீயணைப்புப் படையினது பதவிக்குரிய சம்பளப்படியில் நியமிக்கப்படுவர்.

பயிற்சிக்கென உட்படுத்தப்படும் தருணத்தில் பயிலுநர்கள் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தவுடன் 05 வருட காலத்துக்கு மத்திய மாகாண அரச சேவையில் பணியாற்றுவதென ரூபா 100,000.00 பெறுமதியான பிணை முறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்.

பயிற்சியை ஆரம்பம் செய்ய முன்னர் அனைத்துப் பயிலுநர்களும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

தீயணைப்புப் படையினராக நியமனம் பெற்ற பின்னர் குறித்த பதவியாளர் உரிய உள்ளூராட்சி நிருவாக எல்லைக்குள் வசிப்பது கட்டாயமாகும்.

பயிற்சிக் கால எல்லைக்குள் பயிலுநரது ஏதும் இயலாமை, கவனமின்மை அல்லது கவனக் குறைவு அல்லது வேறேதும் காரணங்களால் ஏற்படும் உடல் ஊனங்கள் தொடர்பில் குறித்த உள்ளூராட்சி அமையம் வகை கூறமாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய A4 ( 21 x 29 செ.மீ ) அளவிலான தாளைப் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். (இல. 01 முதல் 06 வரை முதற் பக்கத்திலும், 07 முதல் 15 வரை இரண்டாவது பக்கத்திலும், 16 முதல் 17 வரை மூன்றாவது பக்கத்திலும் அமையும் வண்ணம் படிவத்தை தயாரித்தல்வேண்டும்.)

(ii) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.01.15 ஆந் திகதிக்கு முன்னர் "மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபை வளாகம், பள்ளேகலை, குண்டசாலை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மத்திய மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி அமையங்களில் நிலவும் தீயணைப்புப் படையில் தீயணைப்பு அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு -2018" எனக் குறிப்பிடல் வேண்டும்.

(iii) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பிக்கும் உள்ளூராட்சி அமையத்தை விண்ணப்பதாரி தீயணைப்புப் படை அலுவலராகத் தகுதி பெறின், அவரது விருப்பின்படி வசிக்க விரும்பும் அல்லது ஏற்கனவே வசிக்கும் உள்ளூராட்சி அதிகார எல்லையின் ஒழுங்கில் குறிப்பிடுதல் வேண்டும்.

| | |
|---|---|
| கண்டி மாநகர சபை -01 | மாத்தளை மாநகர சபை -02 |
| நுவரெலியா மாநகர சபை -03 | தம்புள்ள மாநகர சபை -04 |

(v) உரிய மாதிரிப் படிவத்தின்படி அமையாத விண்ணப்பங்கள் மற்றும் சரியான, தெளிவான கையெழுத்துக்களைக் கொண்டிராத மற்றும் கோரப்படும் இறுதித் தினத்தன்று ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத மற்றும் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குள் அமையாத, பூரணமற்ற, தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் தபாலில் அற்றுப்போதல், தாமதமாகுதல் பற்றி மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் வகை கூற மாட்டாது.

(vi) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் உயர் பதவி வகிப்போர் அல்லது ரூபா 395,520.00 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தைக் கொண்ட அரச அலுவலர் ஒருவர் ஆகியோருள் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்

குறிப்பு :- பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தவிர்ந்த வேறெந்த ஆவணங்களையோ அல்லது அவற்றின் பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் கூடாது.

9. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக அறுநூறு ரூபாவை (ரூ. 600.00) மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளரது 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பில் வரவிலிட்டு மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் வைப்புச் செய்த பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். இந்தத் தொகையைச் செலுத்திய பற்றுச்சீட்டு தவிர்ந்த வேறெந்த அமையத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டோ, காசுக்கட்டளையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனித்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகளும் நியமங்களும் :**

(i) தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள், மாகாணசபை நியதிச் சட்டங்கள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசு மற்றும் மத்திய மாகாண சபையினால் விடுக்கப்படும் சட்டளைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

(ii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 7/2007 மற்றும் அதனுடன் இணைந்ததாக வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய அனைத்து அலுவலர்களும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழிமூலத்துக்கு மேலதிகமாக அடுத்த அரசகரும மொழி பற்றிய தேர்ச்சியை சேவையில் இணைந்த 05 வருட காலத்துக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அரசகரும மொழிகள் திணைக்களம் நடத்தும் மொழிகள் பாடநெறிப் பரீட்சையில் சித்தியடைதல்

வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 05 வருட காலத்துக்குள் குறித்த இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாத அலுவலர்களது வேதன ஏற்றங்கள், தகைமையைப் பெற்றுக் கொள்ளும் வரையில் இடைநிறுத்தம் செய்யப்படும்.

(iii) இந்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மத்திய மாகாணத்துக்குள் 05 வருடங்கள் கட்டாயச் சேவைக்காலத்துக்கு உட்படுதல் வேண்டும். அக்கால எல்லை முடியும் வரை இடமாற்றம் செய்வது தொடர்பாக எந்த வேண்டுகோளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

*11.* **பரீட்சை நிலையம் :**

இந்தப் பரீட்சை கண்டி நகரத்துக்குள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் தினத்தில் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய பிரவேச அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் முன்வைத்தல் வேண்டும்.

*13.* **பரீட்சை நடத்துதல் :**

(i) மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் நடத்தப்படும்.

(ii) இந்தப் பரீட்சையைப் பிற்போடுதல், அல்லது இரத்துச் செய்தல் அல்லது நடத்தியதன் பின்னர் தெரிவுகளைச் செய்தல்/ செய்யாது விடுதல் அல்லது வெற்றிடங்கள் எண்ணிக்கை பற்றிய இறுதி முடிவு மற்றும் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் பற்றிய இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உண்டு.

(iii) ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு உண்டு.

(iv) எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரிடம் தகைமைகள் இல்லாதிருந்தமை, நியமனத்துக்கு முன்னர் எப்போதேனும் கட்டுபிடிக்கப்பட்டால் அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படும். மேலும் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே பொய்யான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை அல்லது சரியான தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டால் பதவியிலிருந்து பணிநீக்கம் செய்யப்படும்.

எச். எம். எம். யூ. பி. ஹேரத்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களம்,
2018, திசெம்பர் 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி அமையங்களில் தீயணைப்புச் சேவையில் நிலவும் தீயணைப்புப் படையினரது அலுவலர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு-2018**

| |
|---|
| |

( அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் )

விண்ணப்பிக்கும் உள்ளூராட்சி அமையமும் குறியீட்டு இலக்கமும், விண்ணப்பத்தின் ஒழுங்கின்படி (தீயணைப்பு அலுவலராக நியமனம் பெறும் நியமனதாரி உரிய உள்ளூராட்சி அதிகார எல்லைக்கள் வசிப்பது கட்டயமாகும்).

| விருப்பின் ஒழுங்கு | உள்ளூராட்சி அமையம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................
( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) PERERA A.B.C.
(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
(iii) முழுப் பெயர் ( சிங்களத்தில்/ஆங்கிலத்தில் ) :
..........................................................................................................................

2. தேசிய ஆள்அடையாள அட்டை இல. :- | | | | | | | | | | | | |

3. (i) பிரவேசப் பத்திரம் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி : ...............................................................
…………………………………………………………………………………………………………
(ii) நிரந்தர வதிவு முகவரி :- ..........................................................................................................
…………………………………………………………………………………………………………
(iii) நிரந்தர வதிவு மாவட்டம் :- ...............................................................................................
(iv) பிரதேச செயலாளர் பிரிவு :- ...............................................................................................
(v) மத்திய மாகாணத்துக்குள் எப்போதிருந்து வசிக்கின்றீர்? :
…………………………………………………………………………………………………………

4. தொலைபேசி இலக்கம் :.......................................................................................

5. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]
(சிங்களம் S தமிழ் - T ஆங்கிலம் - E )
( உரிய எழுத்தைக் கூட்டினுள் எழுதுக)

6. (i) பிறந்த திகதி :- ஆண்டு [ | ] மாதம் [ | ] திகதி [ | ]
(ii) 2018.12.31 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் [ | | | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

7. தேசிய இனம்: ....................................... ..................................................................

8. விவாக /அவிவாக நிலை: .................................... ..............................................

9. உயரம் : அடி: .................. அங்குலம் : ...........................

10. கனரக வாகனம் ஓட்டும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : .........................................

11. கல்வித் தகைமைகள்:
(i) க.பொ.த. ( சா. த.) பரீட்சை : வருடம் : ................ சுட்டிலக்கம் : ..........................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

(ii) தொழில் தகைமைகள்:
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

12. (i) நீங்கள் எப்பொழுதாவது குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? ஆம்/இல்லை
(ii) ஆம் எனின், விபரம் தருக :

13. நீங்கள் ஏற்கனவே இந்தப் பிரதேச சபையின் சேவையில் உள்ளவரெனின் -
(i) தற்போது வகிக்கும் பதவி: ........................................................................................
(ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி: ..........................................................................
(iii) சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் : ......................................................................
(iv) சேவை நிலையத்தின் தொலைபேசி இலக்கம் : .......................................................................

14. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : ...................................................
(ii) பற்றுச்சீட்டு பெறப்பட்ட பிரதேச செயலகம் : ...........................................................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினைக் கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும். |

15. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். இந்த ஆட்சேர்ப்புக்கென விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய நான் வழங்கியுள்ள மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரோ பின்னரோ எனது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்பட முடியும் என்பதையும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் பதவி நீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி :- ..............................                .............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

16. கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதன் பற்றுச்சீட்டு சரியாக ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.............................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :- ..................................................................................
பதவி :- ...............................................................................
திகதி :- ...............................................................................
(பதவி முத்திரையை இடவும்.)

( இந்த விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் உயர் பதவி வகிப்போர் அல்லது ரூ. 395,520.00 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தைக் கொண்ட அரச அலுவலர் ஒருவர் ஆகியோரில் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).
(ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இணைந்திருப்பவர்களுக்கு மட்டும் பொருந்தும்)

திணைக்களத் தலைவரது சான்றுரை :
17. இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ............................................ என்பவர் .......................... ........................................................... என்ற பதவியில் .............................. ஆந் திகதி முதல் ................................................................ என்ற இடத்தில் பணியாற்றுகின்றார் என்பதையும், இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனிப்பட்ட கோவை/சேவை அறிக்கையுடன் சரிபார்க்கப்பட்டன எனவும், அவை உண்மையானவை எனவும், உறுதிப்படுத்துகின்றேன். அவரது பணியும் நடத்தையும் திருப்திகரமானவை என்பதுடன் அண்மித்த கடந்த 05 ஆண்டுக் காலத்துக்குள் அனைத்து சம்பள ஏற்றங்களும் உழைத்துப் பெறப்பட்டுள்ளதெனவும்

மத்திய மாகாணத்தின் தீயணைப்பு அலுவலராக விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் கொண்டுள்ளார் எனவும் நியமனத்துக்கென அவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

............................................
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.
( பதவி முத்திரையை இடவும். )

பெயர் :- ..........................................................
பதவி :- ........................................................
திகதி:-..................................................................

*12-455*

---

**வடமேல் மாகாண அரச சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

வடமேல் மாகாண அரச சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகாக் கொண்ட, ஆண் /பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2019 பெப்புருவரி மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற்போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

1. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

1.1. கல்வித் தகைமைகள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தரப் ) பரீட்சையில் சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழி மற்றும் கணிதம் ஆகியவற்றுடன் ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு ( 06 ) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

பொருளியல், உயிரியல், விவசாயம், இணைந்த கணிதம், கணக்கியல், வணிகப் புள்ளி விவரவியல், வணிகக் கல்வி ஆகிய பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தரப் ) பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொது ஆங்கிலம் மற்றும் பொதுச் சாதாரண பரீட்சை தவிர )ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

1.2. தொழிற் தகைமை

(i) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் உயர் கணக்கீடு அல்லது கணக்காய்வு முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா வில் சித்தியடைந்திருத்தல் அல்லது,

(ii) கணக்காளர் நுட்ப நிறுவனத்தின் ( AAT ) இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது சமனான தகைமையைக் கொண்டிருத்தல்.

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் கணக்கீடு அல்லது முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா ஒன்றில் சித்தி பெற்றிருத்தல்.

(iv) இலங்கை உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கணக்கீடு தொடர்பாக உயர் தேசிய டிப்ளோமாவில் சித்தியடைந்திருத்தல் அல்லது,

(v) பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் முகாமைத்துவம் அல்லது கணக்கீடு அல்லது வணிகமாணி பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

2. **ஏனைய தகைமைகள் :**

2.1. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராகவும் சிறந்த தேக ஆரோக்கியமுடையவராகவும் காணப்பட வேண்டும்.

2.2. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருடங்கள் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளராக உள்ள இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
(பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும். )

2.3. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

2.4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கல்வி மற்றும் தொழிற் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. **சம்பளத் திட்டம்**:

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பளத் திட்டம் 2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 கொண்ட அரச நிர்வாக சுற்று நிருபம் I இன் MN 3– 2016 இன் அடிப்படையில் ரூபா 31,040 – 10X445-11X660–10X730–10X750-ரூ. 57,550 ஆகும். (2020.01.01 ஆந் திகதி வரை மேற் கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும்.)

4. **சேவை நிபந்தனைகள் :-**

4.1. இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

4.2. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவது மூன்று ( 03 ) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்பட்டாகும் என்பதுடன், அவரின் நன்னடத்தைக் காலத்தினுள் தனது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் பேணிச் சென்று, முதலாவது வினைத்திறன் தடைப் பரீட்சையில் சித்தியடைந்தும் இருப்பின் அந்த சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு அவசியமான எல்லா தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் நன்னடத்தைக் கால முடிவில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

4.3. 2014.01.21 ஆந் திகதி அ.நி.சு. 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் பதவிக்கு இணைந்து கொண்ட மொழிக்கு புறம்பாக மற்றைய அரச கரும மொழி/மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

4.4. எல்லா விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய பணிகளை ஆற்றுவதற்கும் போதுமான உடல், உளத் தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

4.5. இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல் /பதவி உயர்வு வழங்குதல் செயற் கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் மற்றும் வடமேல் மாகாண சபை தொழில் நுட்ப சேவை யாப்பின் விதிகள் மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் உத்தியோகத்தர் கட்டுப்பட வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**:

5.1. வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

5.2. பரீட்சைப் பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் 02 பாடத்திற்குமான புள்ளிகளைக் கூட்டி, அவற்றின் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சையின் கல்வி, தொழில் மற்றும் அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படல் மற்றும் உடல் தகுதி பரிசீலிக்கப்படல் நடைபெறும்.

5.3. காணப்படும் வெற்றிடங்கள் மொத்தமும் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் நிரப்பப்படும்.

6. **எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை :**

6.1. எழுத்துப் பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

6.2. இப் பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| பொது உளச் சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

6.3. பரீட்சைக்கான பாடத்திட்டம்

| பாடம் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. பொது உளச் சார்பு | விண்ணப்பதாரியின் சிந்தனைத் தர்கத் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் பல்தேர்வு மற்றும் குறு விடை வினாக்கள் 50 ஐ உள்ளடக்கி இருக்கும். |
| 2. பொது அறிவு | (அ) தேசிய, சர்வதேச சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தொடர்பான அறிவு (ஆ) கூட்டுறவு கொள்கைகள் மற்றும் வணிகம் தொடர்பான பல்தேர்வு மற்றும் குறுவிடை வினாக்கள் 50 ஐ உள்ளடக்கிய வினாப் பத்திரமாகும். |

7. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 600.00 ஐ வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003.02.13க்கு வரவு வைக்கப்படுமாறு செலுத்தப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அந்த நிதியைச் செலுத்தி பெற்றுக் கொள்ளும் வமே.மா.ச.நி. 2 பற்றுச் சீட்டினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைத் தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. ( பற்றுச்சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம் ). எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

8.1. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இசைவாக A4 தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.01.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண அரச சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி III தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2018" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

8.2. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்ளுதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8.3. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ.32,960.00 க்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8.4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2019.01.14 ஆகும்.

9. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும்

பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது.

10. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல்**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்

( அ ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை

( ஆ ) செல்லுபடியான கடவுச் சீட்டு

குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

11. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கபட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது என கருதப்படின் அவர் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு கிடைத்தலானது அவர் குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையை ஏற்றுக் கொண்டமையாகக் கருதப்பட மாட்டாது.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை கால அட்டவணையுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் அலுவலக இணையத் தளத்தில் **(www.psc.nw.gov.lk)** அறிவித்தல் விடுக்கப்படும். பரீட்சை நடைபெறும் திகதிக்கு முந்தியமூன்றாவது நாள் வரை பரீட்சை அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக 'செயலாளர் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்' என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் விபரங்களை வழங்க வேண்டும்.

(i) பரீட்சையின் பெயர் :

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :

(iii) தேசிய ஆள் அடையாள அட்டை எண் :

(iv) முகவரி :

(v) விண்ணப்பத்தை தபாலிலிட்ட திகதி மற்றும் பதிவு பற்றிய தகவல்கள் :

13. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் /தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்திலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

14. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வட மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2018.12.05.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்காக : [ ]

**வடமேல் மாகாண அரச சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2018**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக )
சிங்களம் - [ ] தமிழ் - [ ] ஆங்கிலம் - [ ]

1. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
……………………………………………………………………………………

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) : Mr./ Ms. Mrs.
……………………………………………………………………………………

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
……………………………………………………………………………………

1.4. முழுப் பெயர் (ஆங்கில கப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./ Ms. Mrs.
……………………………………………………………………………………………

1.5. தேசிய ஆள் அடையாள அட்டை எண் :- [ | | | | | | | | | | | ]

2. 2.1. நிரந்தர முகவரி ( சிங்களம் /தமிழில் ) :-
……………………………………………………………………………………

2.2. நிரந்தர முகவரி ( ஆங்கில பெரிய எழுத்தில் ) :-
……………………………………………………………………………………………

2.3. அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-
……………………………………………………………………………………

2.4. தொலைபேசி இலக்கம் :- தனிப்பட்ட :……………………………….

3. பால் : ( உரிய கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுக )
பெண் F : [ ] ஆண் M: [ ]

4. 4.1. பிறந்த திகதி :- ஆண்டு: [ | ] மாதம் : [ | ] திகதி [ | ]

4.2. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளான 2019.01.14 ஆந் திகதிக்கு வயது

வருடங்கள்: [ | | | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

5. 5.1. விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் :- ……………………………….

5.2. பிரதேச செயலாளர் பிரிவு :- ……………………………….

5.3. கிராம அலுவலர் பிரிவு :- ……………………………….

5.4. 2019.01.14 ஆந் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம் :-

வருடங்கள் : [ | | | ] மாதங்கள் :- [ | ] நாட்கள்:- [ | ]

6. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

( அ ) க. பொ. த. ( சா. த. ) பரீட்சை தொடர்பான விபரங்கள்

பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு:- ......................

சுட்டெண் : -......................

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

( ஆ ) க. பொ. த ( உ. த ) பரீட்சை தொடர்பான விபரம்

பரீட்சை ஆண்டு மற்றும் மாதம்:-………………………………..

சுட்டெண் :- ………………………………..

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

( இ ) தொழிற் தகைமைகள்

( இந்த அறிவித்தலில் இல 2.2 இன் கீழ் தகைமை பெற்றுள்ள பாடநெறிகள் தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.)

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | காலப் பகுதி | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

இந்தத் தகவல்கள் தெளிவாகவும், சரியாகவும் பதியப்படவில்லை என்றால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள்

7.1. பற்றுச் சீட்டு இலக்கம் :- ........................ தொகை :-…………………

திகதி :- …………………

வழங்கிய பிரதேச செயலகம் :- .....................

| பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

*8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை***

*( அ )* *இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானது, சரியானது எனவும், இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.*

*( ஆ )* *என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.*

*திகதி :-* ..............................

............................................

*விண்ணப்பதாரியின் கையொப்பம்.*

*9. **விண்ணப்பதாரரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தல்:***

*விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ.32,960.00 இக்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.*

*இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ................. ....................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் மூலம் ..................... ஆந் திகதி என் முன்னிலையின் ஒப்பமிடப்பட்டது என்பதையும் உறுதி செய்கிறேன்.*

*கையொப்பம்* :- ....................
*உறுதிப்படுத்துபவரின் பெயர்* :- ....................
*பதவி, உத்தியோகபூர்வ முத்திரை* :- ....................
*திகதி* :-....................

*12-522/1*

---

***வடமேல் மாகாண அரச சேவையின் காணி ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகையின் குடியேற்ற அதிகாரி III தரத்திற்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018***

*வடமேல் மாகாண அரச சேவையின் காணி ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகையின் குடியேற்ற அதிகாரி III தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட, ஆண் /பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2019, பெப்புரவரி மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற் போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.*

1. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

1.1. கல்வித் தகைமைகள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தரப் ) பரீட்சையில் சிங்களம் /தமிழ் /ஆங்கில மொழி மற்றும் விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றுடன் நான்கு ( 04 ) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு ( 06 ) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர்தரப் ) பரீட்சையில் இரசாயனவியல்,உயிரியலுடன் விவசாய விஞ்ஞானம் அல்லதுபௌதீகவியல் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

1.2. தொழிற் தகைமை

i. குண்டசாலை, அங்குனுகொலபெலஸ்ஸ, பெல்வெஹர, லபுதூவ, வாரியபொல, பிபில, வவுனியா மற்றும் அனுராதபுர விவசாயக் கல்லூரியினால் வழங்கப்படும் இருவருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

ii. அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாய விஞ்ஞானம் தொடர்பான இருவருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

iii. அக்வய்னாஸ் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப ( விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

iv. அரசுடன் இணைந்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட இருவருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

2. **ஏனைய தகைமைகள்:**

2.1. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக காணப்பட வேண்டும்.

2.2. எல்லா விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

2.3. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருடங்கள் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளராக உள்ள இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
( பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும். )

2.4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

2.5. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கல்வி மற்றும் தொழிற் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

குறிப்பு :- ஏதேனும் மதப் பிரிவொன்றின் துறவி ஒருவராக இருக்கும் எவருக்கும் இந்த பரீட்சைக்கு தோற்றும் தகுதி இல்லை.

3. **சம்பளத் திட்டம்:**

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பளத் திட்டம் 2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 கொண்ட அரச நிர்வாக சுற்று நிருபம் I இன் MN 3– 2016 இன் அடிப்படையில் ரூபா 31,040.00 – 10X445-11X660–10X730–10X750-ரூ. 57,550.00 ஆகும். (2020.01.01 ஆந் திகதி வரை மேற் கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும்.)

4. **சேவை நிபந்தனைகள் :-**

4.1. இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் முறை தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

4.2. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவது மூன்று ( 03 ) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்பட்டாகும் என்பதுடன், அவரின் நன்னடத்தைக் காலத்தினுள் தனது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் பேணிச் சென்று, முதலாவது வினைத்திறன் தடைப் பரீட்சையில் சித்தியடைந்தும் இருப்பின் அந்த சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு அவசியமான எல்லா தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் நன்னடத்தைக் கால முடிவில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

4.3. அரச கரும மொழியல்லாத மொழி மூலம் ஒன்றில் சேவைக்கு இணைந்து கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை நன்னடத்தைக் காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.4. 2014.01.21 ஆம் திகதி அ.நி.சு. 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் பதவிக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் தேசிய மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

4.5. III ஆம் தரத்திற்கு 05 வருடங்கள் நிறைவடைவதற்கிடையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தர ) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி மட்டத்திலான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.6. இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல் / பதவி உயர்வு வழங்குதல் செயற் கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் மற்றும் வடமேல் மாகாண சபை தொழில் நுட்ப சேவை யாப்பின் விதிகள் மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் உத்தியோகத்தர் கட்டுப்பட வேண்டும்

5. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**

5.1. வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

5.2. பரீட்சை பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் 02 பாடத்திற்குமான புள்ளிகளைக் கூட்டி, அவற்றின் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சையின் கல்வி, தொழில் மற்றும் அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படல் மற்றும் உடல் தகுதி பரிசீலிக்கப்படல் நடைபெறும்.

6. **எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை :**

6.1. எழுத்துப் பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

6.2. இப் பரீட்சை 02 வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| பொது உளச் சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| விடயம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை (பல்தேர்வு வினாப் பத்திரம்) | 01 மணித்தியாலம் | 100 | 40% |

விரிவான பரீட்சைப் பாடத்திட்டம் 01 ஆம் உபபட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.

7. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 600.00 ஐ வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு செலுத்தப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வமே.மா.ச.நி. 2 பற்றுச் சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. ( பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம் ). எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

8.1. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இசைவாக A4 தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.01.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித

உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண சபை அரச சேவையின் காணி ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகையின் குடியேற்ற அதிகாரி III தரத்திற்குஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை - 2018" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

8.2. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8.3. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ.32,960.00க்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8.4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2019.01.14 ஆகும்.

9. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது.

10. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல்**
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்
( அ ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
( ஆ ) செல்லுபடியான கடவுச் சீட்டு.

குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

11. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது எனக் கருதப்படின் அவர் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு கிடைத்தலானது அவர் குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையை ஏற்றுக் கொண்டமையாகக் கருதப்படக்கூடாது.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை கால அட்டவணையுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக இணையத் தளத்தில் **(www.psc.nw.gov.lk)** அறிவித்தல் விடுக்கப்படும். பரீட்சை நடைபெறும் திகதிக்கு முந்திய மூன்றாவது நாள் வரை பரீட்சை அனுமதிச்சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக 'செயலாளர் வடமேல் மாகாண சபை

அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்' என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் விபரங்களை வழங்க வேண்டும்.

i. பரீட்சையின் பெயர் :
ii. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :
iii. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:
iv. முகவரி :
v. விண்ணப்பத்தை தபாலிட்ட திகதி மற்றும் பதிவு பற்றிய தகவல்கள் :

13. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் /தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

14. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வட மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2018, திசெம்பர் 05.

**உப பட்டியல் - 01. விரிவான பாடத் திட்டம்**

1. பொது உளச் சார்புப் பரீட்சை

விண்ணப்பதாரியின் சிந்தனைத் தர்க்கத் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் நேர முகாமைத்துவம் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கிலான வினாக்களை உள்ளடக்கி இருக்கும்.

2. விடயம் தொடர்பான தொழில் நுட்பப் பரீட்சை

1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு
   ( அ ) மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு
   ( ஆ ) வேலை வாய்ப்பு
   ( இ ) விவசாயத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் நிலை.

2. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு

3. மண் மற்றும் தாவர போசணை
   ( அ ) மண்ணின் அமைப்பு, பௌதீக மற்றும் இரசாயன அமிலத் தன்மை, மற்றும் பயிர்ச் செய்கை மீது அதன் தாக்கம்
   ( ஆ ) தாவரப் போசணை, மண் மற்றும் தாவரப் போசணை முகாமைத்துவம்.
   ( இ ) நாற்று போசணை தொடர்பான விஷேட விடயங்கள்.

4. மண் இரசாயனம் - மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகள்.
5. நீர்ப் பாசன முறைகள் மற்றும் நீர் முகாமைத்துவம்.

( அ ) பல்வேறு பயிர் வகைகளுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைகள் மற்றும் அவற்றின் நீர் முகாமைத்துவம்.
( ஆ ) நுண் நீர்ப்பாசன முறைகள்.
( இ ) நீர் ஓட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம்.

6. பண்ணை இயந்திரமயமாக்கல்.
( அ ) பண்ணை இயந்திரமயமாக்களின் அனுகூலங்கள் மற்றும் பிரதி கூலங்கள்.
( ஆ ) நிலத்தைத் தயார் படுத்தலுக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள்.
( இ ) நீர்ப்பாசனம் மற்றும் கன்றுகள் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் விவசாய இயந்திரங்கள்.
( ஈ ) மேற்கூறப்பட்ட இயந்திரங்களை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு.

7. விவசாய செயற்றிட்டம்.
( அ ) விவசாய செயற்றிட்ட மூலோபாயங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள்.
( இ ) விவசாய செயற்றிட்ட தொடர்பாடல் முறைகள்

8. இழைய வளர்ப்பு
( அ ) இழைய வளர்ப்பு முறையின் அடிப்படை கோட்பாடுகள் மற்றும் கடந்த கால தகவல்கள் தொடர்பான அறிவு
( ஆ ) இழைய வளர்ப்பு பயன்பாடுகள் /பிரயோகம் தொடர்பான உதாரணங்கள்.
( இ ) இழைய வளர்ப்பின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும்.

9. கன்றுகள் தொற்றுத் தடுப்பு தொடர்பான அறிவு
( அ ) கன்றுகள் தொற்றுத் தடுப்பு விதிமுறைகள் தொடர்பான அறிவு
( ஆ ) கன்றுகள் தொற்றுத் தடுப்பு முறைகள்.

10. தாவரப் பாதுகாப்பு
( அ ) தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் ( தாவரங்கள் /மரபணு ப்ளஸ்மா )
( ஆ ) தாவரப் பாதுகாப்பு முறைகள் ( தாவரங்கள் /மரபணு ப்ளஸ்மா )

11. மரபணுத் தொழில் நுட்பம்
( அ ) DNA வின் முக்கியத்துவம்.
( ஆ மரபணு என்றால் என்ன? அதன் தொழிற்பாடு
( இ ) DNA தொழில் நுட்பத்தை பயன்படுத்த முடியுமான சந்தர்ப்பங்கள்.
( உ ) மரபணு பொறியியல் நுட்ப முறைகள் மூலம் தாவரங்களை மேம்படுத்த முடியுமான சந்தர்ப்பங்கள்.

12. இலங்கையின் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் மகாவலி திட்டம் தொடர்பான அறிவு
( அ ) குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இடங்கள்.
( ஆ ) மகாவலி வேலைத் திட்டத்திற்கு உட்பட்ட பிரதேசங்கள்.

13. காணி பயன்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான அறிவு

14. வரைபடம் தொடர்பான அறிவு
( அ )காற்று வேகமாணி, ரோட் ட்ரகர், டம்பி லெவல், தியோடலைட்டர்.
( ஆ )1 : 50,000 – 1 : 10,000 அங்குல வரைபடம் மற்றும் இறுதிக் கிராம திட்டப்படம் தொடர்பான விபரம்

15. இலங்கையில் தற்போதுள்ள காணி தொடர்பான மற்றும் அது தொடர்பான திணைக்களங்கள், நிறுவனங்கள் தொடர்பான அறிவு
( அ ) காணி வகைகள் - அரச காணிகள்
- தனியார் காணிகள்
- பரம்பரைக் காணிகள்

16. காணி அபிவிருத்தி மற்றும் பகிரந்தளிப்பு தொடர்பான அறிவு

( அ ) நிகழ்கால காணி அபிவிருத்தி மற்றும் பகிர்ந்தளிப்பு தொடர்பில் செயற்படுத்தப்படும் தேசிய வேலைத் திட்டம் தொடர்பான தெளிவு

காணியற்ற நபர்களை இனம் காணுதல்.
பிம் சவிய வேலைத் திட்டம்.
ஒரு லட்சம் காணித் துண்டுகள் வேலைத் திட்டம்.

17. அரசர் காலத்தில் இருந்து இன்று வரை காணியின் உரிமையை மாற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் தொடர்பான அறிவு

( அ ) சன்னஸ், நிந்தகம்
( ஆ ) குத்தகை, ஸ்வர்ண பூமி, ஜய பூமி, ரத்ன பூமி, ரன்பிம

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக : [ ]

**வடமேல் மாகாண அரச சேவையின் காணி ஆணையாளர் திணைக்களத்தின்**
**மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகையின்**
**குடியேற்ற அதிகாரி III தரத்திற்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக )

சிங்களம் - [ ] தமிழ் - [ ] ஆங்கிலம் - [ ]

1. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
………………………………………………………………………………………

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./ Ms. Mrs. :-
………………………………………………………………………………………

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
………………………………………………………………………………………

1.4. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./ Ms. Mrs. :-
………………………………………………………………………………………

1.5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. 2.1. நிரந்தர முகவரி ( சிங்களத்தில் /தமிழில் ) :-
………………………………………………………………………………………

2.2. நிரந்தர முகவரி ( ஆங்கில கெப்பிடல் எழுத்தில் ) :-
………………………………………………………………………………………

2.3. அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-
………………………………………………………………………………………

2.4. தொலைபேசி இலக்கம் :……………………………

3. 3.1 பால் : ( உரிய கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுக )

பெண் F : [ ] ஆண் M: [ ]

3.2. பிறந்த திகதி :- ஆண்டு: [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி [ ][ ]

3.3. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளான 2019.01.14 ஆந் திகதிக்கு வயது

வருடங்கள்: | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

4. 4.1. விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் :- ....................................

4.2. பிரதேச செயலாளர் பிரிவு :- ....................................

4.3. கிராம அலுவலர் பிரிவு :- ....................................

4.4. 2019.01.14 ஆம் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம் :-

வருடங்கள் : | | | மாதங்கள் :- | | | நாட்கள் :- | | |

5. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

5.1 க. பொ. த. ( சா. த. ) பரீட்சை தொடர்பான விபரங்கள்

பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு:-.....................

சுட்டெண் :-.....................

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

5.2 க. பொ. த ( உ. த. ) பரீட்சை தொடர்பான விபரம்

பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு மற்றும் மாதம் :- ....................................

சுட்டெண் :- ....................................

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

5.3 தொழிற் தகைமைகள் :

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | காலப் பகுதி | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள்

6.1. பற்றுச் சீட்டு இலக்கம் :- ........................ தொகை :- .....................

திகதி :- .....................

வழங்கிய பிரதேச செயலகம் :- .....................

| பற்றுச் சீட்டை இங்கே கழறாதவாறு ஒட்டவும். |
|---|

7. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

( அ ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை, சரியானவை எனவும், இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

( ஆ ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னராயின்பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ................................

...................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

9. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ.32,960.00 இற்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ..................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்:- ................................

உறுதிப்படுத்துபவரின் பெயர்:- .......................................

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை:- ................................

திகதி :-.....................

12-522/2

## வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

## வடமேல் மாகாண அரச சேவையின் III ஆம் தர சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல். - 2018 ( திறந்த )

வடமேல் மாகாண அரச சேவையின் குருநாகல் மாநகர சபையின் நிறைவேற்று சேவை வகையின் சட்ட அலுவலர் III ஆம் தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகாக் கொண்ட, ஆண் /பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்**

1.1. கல்வித் தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்று உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் அல்லது சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

1.2. அனுபவம்

நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் மூன்று வருடங்களுக்கு ( 03 ) குறையாத தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல். ( குறைந்த பட்சம் நீதிமன்றத்தில் 15 வருடங்களாவது செயற்பாட்டு பணியில் உள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். )

2. **உடல் தகைமை:**

எல்லா விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

3. **ஏனைய தகைமைகள் :**

(i) இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய ஐந்து ( 05 ) வருடங்கள் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளராக உள்ள இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

( பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும். )

(ii) விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக காணப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கல்வி மற்றும் தொழிற் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 25 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

( ஏற்கனவே அரச /மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது. )

4. **சம்பளத் திட்டம் :**

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பளத் திட்டம் 2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 கொண்ட அரச நிர்வாக சுற்று நிருபம் I இன் SL 1 – 2016 இன் அடிப்படையில் ரூ. 47,615.00–10X1335- 8 X1630 – 17X2170 - ரூ. 110,895.00 ஆகும். (2020.01.01 ஆந் திகதி வரை மேற் கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும்.)

5. **சேவை நிபந்தனைகள் :-**

(i) இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

(ii) இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவது மூன்று ( 03 ) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்பட்டாகும் என்பதுடன், அவரின் நன்னடத்தைக் காலத்தினுள் தனது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் பேணிச் சென்று, முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தும் இருப்பின் அந்த சேவையில் நிரந்தரமாக்கப் படுவதற்கு அவசியமான எல்லா தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் நன்னடத்தைக் கால முடிவில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

(iii) 2014.01.21 ஆந் திகதி அ.நி.சு 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் பதவியில் இணைந்த மொழி தவிர்ந்த மற்றைய அரச மொழி /மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

(iv) அரச கரும மொழியல்லாத மொழி மூலம் ஒன்றில் சேவைக்கு இணைந்து கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை நன்னடத்தைக் காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(v) இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல் /பதவி உயர்வு வழங்குதல் செயற் கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல்

மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் மற்றும் வடமேல் மாகாண சபை தொழில்நுட்ப சேவை யாப்பின் விதிகள் மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் உத்தியோகத்தர் கட்டுப்பட வேண்டும்.

6. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு முன் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். அந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடைவதற்காக 60% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்பவர் பதவியில் இணைத்துக் கொள்ளப்படுவார்.

7. **நேர்முகப் பரீட்சை :**

7.1. தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு புள்ளி வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

7.2. நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்

| புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | உச்ச புள்ளிகளின் அளவு |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள்<br>● அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொண்ட சட்டம் தொடர்பான பட்டம்-<br>- முதலாம் வகுப்புச் சித்தி 20 புள்ளிகள்-<br>- இரண்டாம் வகுப்பு உயர் சித்தி 20 புள்ளிகள்-<br>- இரண்டாம் வகுப்பு தாழ் சித்தி 10 புள்ளிகள்<br>சட்டக் கல்லூரியில் இறுதி வருடத்தில் முதலாம் நிலைச் சித்திக்கு 15 புள்ளிகள்<br>சட்டக் கல்லூரியில் இறுதி வருடத்தில் இரண்டாம் நிலைச் சித்திக்கு 10 புள்ளிகள்<br>குறிப்பு :- கௌரவ சித்தியுடன் இறுதிப் பரீட்சை சித்தியடைந்திருப்பின் மாத்திரம் 10 புள்ளிகள் வழங்கப்படும் (உச்ச தகுதிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். – பட்டம் அல்லது சட்டக் கல்லூரி தகைமை என்பவற்றில் ஒன்றுக்கு மாத்திரம்) | 20 |
| ஏனைய தொழிற் தகைமைகள்<br>● அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் துறை தொடர்பான ஒரு வருடத்திற்குக் குறையாத பட்டப் பின் டிப்ளோமா அல்லது சட்டப் பின் டிப்ளோமா சான்றிதழுக்காக ( ஒரு சான்றிதழுக்கு 05 புள்ளிகள் வீதம். )<br>● அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் துறை தொடர்பான ஆறு மாதங்கள் / 720 மணித்தியாலங்களுக்குக் குறையாத டிப்ளோமா ஒன்றிற்கு( ஒரு டிப்ளோமாவிற்கு 03 புள்ளிகள் வீதம் )<br>● அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் துறை தொடர்பான 03 மாதங்கள் / 360 மணித்தியாலங்களுக்குக் குறையாத டிப்ளோமா ஒன்றிற்கு<br>● ( ஒரு டிப்ளோமாவிற்கு 02 புள்ளிகள் வீதம் ) | 15 |
| மேலதிக அனுபவம்<br>சட்டத்தரணி ஒருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் அனுபவம்.-<br>06 மாதத்திற்கு மேற்பட்ட ஒரு வருடத்திலும் குறைந்த 02 புள்ளிகள்<br>- ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிக பட்சம் 30 புள்ளிகள்( அடிப்படைத் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டத்தரணியாகக் கடமையாற்றிய 03 வருடங்கள் தவிர )<br>- ( 20 வருடங்களுக்கு குறையாத காலம் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணி அல்லது நீதிபதி ஒருவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | 30 |

| புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | உச்ச புள்ளிகளின் அளவு |
|---|---|
| கணினி அறிவுபல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டம் ஒன்றிற்காக தகவல் தொழில் நுட்பத்தை பிரதான பாடமாகக் கொண்டு கற்றிருத்தல். ( 15 புள்ளிகள் )<br>அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 01 வருடத்திற்கு குறையாத தகவல் தொழில் நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்கு அல்லது 1500 மணித்தியாலத்திற்கு ( 10 புள்ளிகள் )<br>அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்கு<br>06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் - 07 புள்ளிகள்<br>03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் - 05 புள்ளிகள | 30 |
| ஆங்கில மொழித் தேர்ச்சி<br>ஆங்கில மொழி மூலம் கற்ற பட்டப் பின் பட்டம் /பட்டம் /பட்டப் பின் சட்டமாணிப் பட்டம் - 15 புள்ளிகள்<br>பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக் கொண்டுள்ள டிப்ளோமா பாடநெறி ஒன்றுக்காக ( 01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள் ) - 10 புள்ளிகள்<br>பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக் கொண்டுள்ள சான்றிதழ் பாடநெறி ஒன்றுக்காக ( 01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள் )<br>06 மாதங்கள் /720 மணித்தியாலங்கள் - 07 புள்ளிகள்<br>03 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் - 05 புள்ளிகள் | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

8. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 1200.00 ஐ வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு செலுத்தப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வமே.மா.ச.நி. 2 பற்றுச் சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. ( பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம் ).

9. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

9.1. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக A4 தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2019.01.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " வடமேல் மாகாண அரச சேவையின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை- 2018 " எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

9.2. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ.32,960.00 இக்கு மேற்பட்ட மாதாந்த

அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9.3. ஏற்கனவே, அரச /மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

9.4. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

9.5. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2019.01.14 ஆகும்.

10. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டிராதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது

11. ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி உரிய தகைமையைக் கொண்டிருக்கவில்லை என்பது நியமனம் வழங்கப்பட முன்னர் தெரிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். நியமனம் வழங்கப்பட்ட பின்னர் அறிந்தே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என்பதோ உண்மையான தகவல்களை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ அறிய வந்தால் அவர் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

12. இந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலுடன் தொடர்புடைய அல்லது இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும். அவ்வாறே, அறிவித்தலில் ஏற்பாடுகள் இல்லாத ஏதேனும் விடயங்கள் காணப்படின், அது தொடர்பான இறுதித் தீர்மானமும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கே உரியது.

13. இந்த நேர்முகப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் /தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

14. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2018, திசெம்பர் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு :

**வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு**
**வடமேல் மாகாண அரச சேவையின் III ஆம் தர சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல். - 2018 ( திறந்த )**

1\. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
..........................................................................................

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./ Ms. /Mrs. :-
..........................................................................................

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
..........................................................................................

1.4. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./ Ms./ Mrs. :-
..........................................................................................

1.5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:- | | | | | | | | | | | | |

2\. 2.1. நிரந்தர முகவரி ( சிங்களம் /தமிழில் ) :-
..........................................................................................

2.2. தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட :.............................. அலுவலகம் : ...............................................

3\. பால் : ( உரிய கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுக )

பெண் F : ☐ ஆண் M: ☐

4\. பிறந்த திகதி :- ஆண்டு: | | | மாதம் : | | | திகதி | | |

4.1 2019.01.14 ஆந் திகதிக்கு வயது வருடங்கள்: | | | | | மாதங்கள் : | | | நாட்கள் | | |

5\. 2019.01.14 ஆந் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம் :-

வருடங்கள்: | | | மாதங்கள் : | | | நாட்கள் | | |

6\. **தகைமைகள் :**

6.1. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :
..........................................................................................

6.2. அனுபவம்:
..........................................................................................

6.3. மேலதிக கல்வித் தகைமைகள் :
..........................................................................................

6.4. மேலதிக தொழிற் தகைமைகள் :
..........................................................................................

6.5. மேலதிக அனுபவம் :
..........................................................................................

6.6. கணினி அறிவு :
..........................................................................................

6.7. ஆங்கில மொழித் தேர்ச்சி :
..........................................................................................

7. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள்

7.1. பற்றுச் சீட்டு இலக்கம் :- ..................... தொகை :-.....................

திகதி :- .....................

வழங்கிய பிரதேச செயலகம் :- .....................

| பற்றுச் சீட்டை இங்கே கழறாதவாறு ஒட்டவும். |
|---|

*8.* ***விண்ணப்பதாரியின் உறுதியுரை***

.......................................... ஆகிய நான், இந்த விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதும், சரியானதும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என கண்டுபிடிக்கப்பட்டால் வடமேல் மாகாண அரச சேவையின் சட்ட அலுவலர் III தரப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான தகுதி கவனத்திற் கொள்ளப்படாமல் போகும் என்பதையும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்பதையும் நான் நன்றாக அறிந்து வைத்துள்ளேன்.

..........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :- .....................

விண்ணபதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்.
( பொருத்தமற்றதை வெட்டி விடவும் )

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி .......................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ........................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர்:-..........................................
கையொப்பம்:-..........................................
பதவி, உத்தியோகபூர்வ முத்திரை:-..........................................

( இந்த உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, இராணுவ, கடற்படை அல்லது விமானப்படை அதிகாரி ஒருவர், அல்லது ரூ.32,960.00 இக்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் விதப்புரை
( பொருத்தமற்றதை வெட்டி விடவும் )

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................................ என்பவர் இந்த திணைக்களத்தில் பணியாற்றும் ஒருவர் என்பதுடன், அவர் நிரந்தர பதவி ஒன்றை வகித்துக் கொண்டிருக்கிறார் என்பதையும், அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், அவர் தற்போது ஆற்றும் பதவியில் இருந்து அவரை விடுவிக்கலாம் எனவும், அவரின் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் ஒப்பிடும் போது சரியானவை என்றும், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் அவர் சட்ட அலுவலர் பதவிக்குப் பொருத்தமானவர் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

..........................................
( உத்தியோகபூர்வ முத்திரையைப் பொறிக்கவும் ) திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

*12-522/3*

---

**வடமேல் மாகாண அரச சேவையின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விவசாய ஆலோசகர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2018**

வடமேல் மாகாண அரச சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் விவசாய ஆலோசகர் III ஆம் தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகாக் கொண்ட, ஆண் /பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பரீட்சை வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2019, பெப்புருவரி மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற் போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

1. **கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்**

1.1. கல்வித் தகைமைகள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தரப் ) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி மற்றும் விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றுடன் நான்கு ( 04 ) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு ( 06 ) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தரப் ) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு உட்பட விஞ்ஞானத் துறையில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பொதுஆங்கிலம் மற்றும் பொதுச் சாதாரண பரீட்சை தவிர )

1.2. தொழிற் தகைமை

(i) குண்டசாலை, அங்குனுகொலபெலஸ்ஸ, பெல்வெஹர, லபுதூவ, வாரியபொல, பிபில, வவுனியா மற்றும் அனுராதபுர விவசாயக் கல்லூரியினால் வழங்கப்படும் இருவருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாய விஞ்ஞானம் தொடர்பான இருவருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) அக்வய்னாஸ் கல்லூரியினால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iv) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட இருவருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(v). தொழிற்துறைக்கு பொருத்தமான தேசிய தொழில் நிபுணத்துவ ( NVQ ) 06 மட்ட தகைமை ஒன்றைப் பெற்றிருத்தல்.

2. **ஏனைய தகைமைகள்**

2.1. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக காணப்பட வேண்டும்.
2.2. எல்லா விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.
2.3. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருடங்கள் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளராக உள்ள இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும். ( பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும். )
2.4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும்,35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருக்க வேண்டும்.
2.5. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கல்வி மற்றும் தொழிற் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

குறிப்பு :- ஏதேனும் மதப் பிரிவொன்றின் துறவி ஒருவராக இருக்கும் எவருக்கும் இந்தப் பரீட்சைக்கு தோற்றும் தகுதி இல்லை.

3. **சம்பளத் திட்டம்**:

இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பளத் திட்டம் 2016.02.25 ஆந் திகிதிய 03/2016 ஆம் இலக்கம் கொண்ட அரச நிர்வாக சுற்று நிருபம் I இன் MN 3– 2016 இன் அடிப்படையில் ரூபா 31,040.00 – 10x445-11x660–10x730–10x750-ரூ. 57,550.00 ஆகும். ( 2020.01.01 ஆந் திகதி வரை மேற் கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும்.)

4. **சேவை நிபந்தனைகள் :-**

4.1. இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் முறை தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

4.2. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவது மூன்று ( 03 ) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்பட்டாகும் என்பதுடன், அவரின் நன்னடத்தைக் காலத்தினுள் தனது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் பேணிச் சென்று, முதலாவது வினைத்திறன் தடைப் பரீட்சையில் சித்தியடைந்தும் இருப்பின் அந்த சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு அவசியமான எல்லா தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் நன்னடத்தைக் கால முடிவில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

4.3. அரச கரும மொழியல்லாத மொழி மூலம் ஒன்றில் சேவைக்கு இணைந்து கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை நன்னடத்தைக் காலத்தினுள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.4. 2014.01.21 ஆந் திகதி அ.நி.சு. 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் பதவிக்கு விதிக்கப்பட்டுள்ள இரண்டாம் தேசிய மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

4.5. III ஆம் தரத்திற்கு 05 வருடங்கள் நிறைவடைவதற்கிடையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தர ) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி மட்டத்திலான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.6. இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல் / பதவி உயர்வு வழங்குதல் செயற் கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் மற்றும் வடமேல் மாகாண சபை தொழில் நுட்ப சேவை யாப்பின் விதிகள் மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் உத்தியோகத்தர் கட்டுப்பட வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**

5.1. வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

5.2. பரீட்சை பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் 02 பாடத்திற்குமான புள்ளிகளைக் கூட்டி, அவற்றின் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சையின் கல்வி, தொழில் மற்றும் அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படல் மற்றும் உடல் தகுதி பரிசீலிக்கப்படல் நடைபெறும்.

5.3. வெற்றிடங்களில் 70% திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும்.

5.4. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 30% வெற்றிடங்களைப் பூரணப்படுத்த போதுமான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட உள்ளக விண்ணப்பதாரிகள் உரிய திணைக்களத்தில் /அமைச்சில் இல்லாத சந்தரப்பத்தில் முடியாத சந்தர்ப்பத்தில் எஞ்சிய வெற்றிடங்களும் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கொண்டு பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. **எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை :**

6.1. எழுத்துப் பரீட்சை சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

6.2. இப் பரீட்சை 02 வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது.

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| பொது உளச் சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| விடயம் தொடர்பான தொழில்நுட்ப அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

விரிவான பரீட்சைப் பாடத்திட்டம் 01 ஆம் உப பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.

7. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 600.00 ஐ வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு செலுத்தப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வமே.மா.ச.நி 2பற்றுச் சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில்

செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. ( பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம் ). எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

8.1. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இசைவாக A4 தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.01.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண அரசசேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் விவசாய ஆலோசகர் III தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை - 2018" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

8.2. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8.3. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரனி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ.32,960.00 க்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8.4. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.01.14 ஆகும்.

9. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவில்லாத, பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின்போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது.

10. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல் :**
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்:-

( அ ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
( ஆ ) செல்லுபடியான கடவுச் சீட்டு.

குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

11. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது என கருதப்படின் அவர் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு

கிடைத்தலானது அவர் குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையை ஏற்றுக் கொண்டமையாகக் கருதப்படமாட்டாது.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை கால அட்டவணையுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் விடுக்கப்படும். பரீட்சை நடைபெறும் திகதிக்கு முந்திய மூன்றாவது நாள் வரை பரீட்சை அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக "செயலாளர் வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது பின்வரும் விபரங்களை வழங்க வேண்டும்.

(i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(ii) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பத்தை தபாலிட்ட திகதி மற்றும் பதிவு பற்றிய தகவல்கள்.

13. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் /தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

14. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வட மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.
2018, திசெம்பர் 05.

**உப பட்டியல் - 01**
**விரிவான பாடத்திட்டம்**

1. பொது உளச் சார்புப் பரீட்சை
விண்ணப்பதாரியின் சிந்தனைத் தர்கத் திறன், சிந்திக்கும் பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு அல்லது கட்டமைப்பு வினாக்களை உள்ளடக்கி இருக்கும்.

2. விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை

1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு
( அ ) மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு
( ஆ ) வேலை வாய்ப்பு
( இ ) ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் விவசாயத் துறைக்குள்ள இடம்.

2. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு

3. மண் மற்றும் தாவர போசணை
   ( அ ) மண்ணின் அமைப்பு, பௌதீக மற்றும் இரசாயன அமிலத் தன்மை, மற்றும் பயிர் செய்கை மீது அதன் தாக்கம்
   ( ஆ ) தாவரப் போசணை, மண் மற்றும் தாவரப் போசணை முகாமைத்துவம்.
   ( இ ) நாற்று போசணை தொடர்பான விஷேட விடயங்கள்.

4. நெல் உற்பத்தி
   ( அ ) மண் மற்றும் காலநிலைத் தேவைப்பாடுகள்.
   ( ஆ ) வகைகள்
   ( இ ) நிலத்தை தயார்படுத்தல் மற்றும் நாற்று மேடைப் பராமரிப்பு
   ( ஈ ) பூச்சிகள் மற்றும் நோய்க் கட்டுப்பாடு
   ( உ ) பசளையிடல்.
   ( ஊ ) நீர் முகாமைத்துவம்.
   ( எ ) அறுவடை செய்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்ப விடயங்கள்.
   ( ஏ ) விரத நெல் உற்பத்தி

5. ஏனைய பயிர் உற்பத்தி
   ( அ ) பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு, சோளம், மற்றும் ஏனைய பயிர் வகைகள், மண் மற்றும் காலநிலைத் தேவைப்பாடுகள் மற்றும் நடுகை செயற்பாடுகள், தரமான விதை உற்பத்தி, களஞ்சியப்படுத்தலும் சந்தைப்படுத்தலும், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம், சந்தைக்கு முன்வைத்தல்.

6. மரக்கறி உற்பத்தி
   ( அ ) மரக்கறி நாட்டு மேடை பராமரிப்பு
   ( ஆ ) மரக்கறி வகைகள் நடுகை நடவடிக்கைகள் மற்றும் அறுவடை செய்தல் மற்றும் தயார்படுத்தல்.

7. பழ வகைகள்
   ( அ )பழ வகைகள் நடுகை நடவடிக்கைகள் மற்றும் அறுவடை செய்தலும் தயார்படுத்தலும்

8. பயிர் பாதுகாப்பு
   ( அ ) பயிர்களுக்கு ஏற்படும் பிரதான நோய்கள் மற்றும் பூச்சிகளை இனம் காணுதல், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள்.
   ( ஆ ) களைக் கட்டுப்பாடு மற்றும் களைக் கட்டுப்பாட்டு முறைகள்.
   ( இ ) கிருமி நாசினிகளைப் பயன்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைமைகள்.

9. மண் இரசாயனம் - மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகள்.

10. நீர்ப்பாசன முறைகள் மற்றும் நீர் முகாமைத்துவம்.
   ( அ ) பல்வேறு பயிர் வகைகளுக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைகள் மற்றும் அவற்றின் நீர் முகாமைத்துவம்.
   ( ஆ ) நுண் நீர்ப்பாசன முறைகள்.
   ( இ ) நீர் ஓட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம்.

11. பண்ணை இயந்திரமயமாக்கல்.
   ( அ ) பண்ணை இயந்திரமயமாக்களின் அனுகூலங்கள் மற்றும் பிரதி கூலங்கள்.
   ( ஆ ) நிலத்தைத் தயார்படுத்தலுக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள்.
   ( இ ) நீர்ப்பாசனம் மற்றும் கன்றுகள் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் விவசாய இயந்திரங்கள்.
   ( ஈ ) மேற்கூறப்பட்ட இயந்திரங்களை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு.

12. தேனீ வளர்ப்பு
   ( அ ) பொருளாதார முக்கியத்துவம்.
   ( ஆ ) தேன் பெட்டிகளை அமைத்தல் மற்றும் நடாத்துதல்.
   ( இ ) அறுவடையைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சந்தைக்குத் தயார் செய்தல்.

13. மலர்ச் செய்கை மற்றும் நில அலங்கரிப்பு
( அ ) பொருளாதார முக்கியத்துவம்.
( ஆ ) நில அலங்கரிப்பு முறைகள்.
( இ ) சந்தைக்காக வெட்டப்படும் பூக்களை உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றை சந்தைக்காக தயார்படுத்தல்.
( ஈ சந்தைக்காக அலங்காரச் செடிகளை உற்பத்தி செய்தல்.

14. பாதுகாப்பு பயிர்ச் செய்கை
( அ ) முக்கியத்துவம்
( ஆ ) திட்டமிடல்.
( இ ) பயிர்களைத் தெரிவு செய்தல், நீர் மற்றும் பசளை வழங்குதல்.
( ஈ ) நடாத்திச் செல்லுதல் மற்றும் அறுவடைகளை தயார் செய்தல்.

15. கால்நடை வளர்ப்பு
( அ ) கோழி உற்பத்தி மற்றும் பால் மாடு வளர்ப்புக் கைத்தொழிலின் முக்கியத்துவம்.
( ஆ ) ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பின் கீழ் மேற்கூறிய உற்பத்திகளை மேற்கொள்ளல்.

16. விவசாய செயற்றிட்டம்.
( அ ) விவசாய செயற்றிட்ட மூலோபாயங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள்.
( ஆ ) விவசாய செயற்றிட்ட தொடர்பாடல் முறைகள்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு : [ ]

**வடமேல் மாகாண அரச சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையின்**
**விவசாய ஆலோசகர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக )

சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

1\. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
……………………………………………………………………………………

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./ Mrs./ Ms.
……………………………………………………………………………………

1.3. முழுப் பெயர் ( சிங்கலத்தில் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
……………………………………………………………………………………

1.4. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடடல் எழுத்துக்களில் ) : Mr./ Ms. / Mrs.
………………………………………………………………………………………………

1.5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- [ | | | | | | | | | | | ]

2\. 2.1. நிரந்தர முகவரி ( சிங்களம் /தமிழில் ) :-
……………………………………………………………………………………

2.2. நிரந்தர முகவரி ( ஆங்கில கெப்பிடடல் எழுத்தில் ) :-
………………………………………………………………………………………………

2.3. அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-
……………………………………………………………………………………

2.4. தொலைபேசி இலக்கம் :- :………………………………………………

3. 3.1 பால் : ( உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக )

பெண் F : ☐ ஆண் M: ☐

3.2. பிறந்த திகதி :- வருடங்கள்: ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் ☐☐

33. 2019.01.14 ஆந் திகதிக்கு வயது வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

4. 4.1. விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் :- ....................................

4.2. பிரதேச செயலாளர் பிரிவு : ....................................

4.3. கிராம அலுவலர் பிரிவு : ....................................

4.4. 2019.01.14 ஆந் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம் :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் :- ☐☐ நாட்கள் :- ☐☐

5. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:

5.1 க. பொ. த. ( சா. த. ) பரீட்சை தொடர்பான விபரங்கள்

பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு மற்றும் மாதம் :- ......................

சுட்டெண் : -......................

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

5.2 க. பொ. த. ( உ. த. ) பரீட்சை தொடர்பான விபரம்

பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு மற்றும் மாதம் :- .....................................

சுட்டெண்:- .....................................

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

5.3 தொழிற் தகைமைகள்

*( இந்த அறிவித்தலில் இல 2.2 இன் கீழ் தகைமை பெற்றுள்ள பாடநெறிகள் தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.)*

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | காலப் பகுதி | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

6. **பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :**

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் :- ........................ தொகை :- .....................

திகதி :- .....................

பணம் செலுத்திய பிரதேச செயலகம் :- .....................

(பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும்.)

7. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

( அ ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவையும், சரியானவையும் எனவும், இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

( ஆ ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின், பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ................................ ...................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் அல்லது ரூ.32,960.00 இக்கு மேற்பட்ட மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி .................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ..................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்:- .....................

உறுதிப்படுத்துபவரின் பெயர்:- .....................

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை:- .....................

திகதி :-.....................

12-522/4

**வடமேல் மாகாண பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்பின் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018**

வடமேல் மாகாணத்தில் பாடசாலைகளில் காணப்படும் இலங்கை ஆசிரியர் சேவையின் வெற்றிடங்களுக்காக வடமேல் மாகாண அரச ஆசிரியர் சேவையின் சேவை யாப்பின் அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்புக்கு மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி தகைமை பெற்ற வடமேல் மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தமிழ் மொழி மூலப் பாடங்களுக்காக வேறு மாகாணங்களில் வதிவோரும் விண்ணப்பிக்கலாம்.

| விடய இலக்கம் | விடயம் |
|---|---|
| 03 | கணிதம் |
| 04 | விஞ்ஞானம் |
| 10 | சித்திரம் |
| 15 | தகவல் தொழில்நுட்பம் |
| 16 | சுகாதாரமும் உடற் கல்வியும் |

2. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களுக்காக மாவட்ட மட்டத்தில் பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன், அந்த ஆட்சேர்ப்பின்போது உரிய மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். குருநாகல் மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் குருநாகல் மாவட்டப் பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும், புத்தளம் மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் புத்தளம் மாவட்டப் பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களை நிறைவு செய்வதற்கு தகுதியானவர்கள் போதுமானதாக இல்லாத போது அடுத்த மாவட்டத்தில் அந்த பாடத்திற்கு தகுதியானோரில் இருந்து வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் மொழி மூல பாடங்களுக்கு தகுதி வாய்ந்தோர் போதிய அளவு வடமேல் மாகாணத்தினுள் இல்லாதபோது மாத்திரம் குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களுக்கு வேறு மாகாணங்களில் இருந்து விண்ணப்பித்த தகுதி வாய்ந்தோரில் இருந்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. காணப்படும் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் சேவை அவசியத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் உரிய பாடங்களுக்குக் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை முதலாம் உபபட்டியலில் காட்டப்பட்டுள்ளது.

4. **சம்பள முறைமை :**

இந்தப் பதவிக்குரிய சம்பளத் திட்டம் 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்கம் கொண்ட அரச நிர்வாக சுற்று நிருபம் GE 1 – 2016 இன் படி. ரூபா 27,740.00 – 6 x 300 – 7 x 380 – 2 x 445– ரூபா 33,090.00 ஆகும். ( 2020.01.01 ஆந் திகதி வரை மேற்கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும். )

5. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

5.1. கல்வித் தகைமைகள்

(i) கற்பித்தல் நடவடிக்கைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷேடமாக்கப்பட்ட பாடங்களுக்குரியதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட உபபட்டியல் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான பட்டம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். இந்தப் பட்டம் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்க வேண்டும்.

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றும் இருக்க வேண்டும்.

மிக முக்கியம் ( விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் )

- தமது பட்டத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் அவதானம் செலுத்த வேண்டும்.
- பட்டத்திற்காக கற்ற பிரதான பாடம் /பாடங்கள் தொடர்பில் மட்டும் குறிப்பிட்ட பாட வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கக் கூடிய பாடங்களின் உச்ச எல்லை 03 ஆகும். விருப்பின் முன்னுரிமை அடிப்படையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
- விண்ணப்பித்த பாடம் /பாடங்கள் எக்காரணம் கொண்டும் விண்ணப்பித்த பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

5.2. உடல் மற்றும் உளத் தகைமைகள் :

சகல விண்ணப்பதாரிகளும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்றுவதற்கு தகுந்த உடல், உள ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.

5.3. வயது :

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்த வயதெல்லை 21 ஆகும். ஆகக் கூடிய வயதெல்லை 40 ஆகும்.

5.4. ஏனைய தகைமைகள் :

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(ii) சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராகவும், உடலாரோக்கியம் மிக்கவராகவும் காணப்பட வேண்டும்.

(iii) வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும்.

(iv) வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருடங்கள் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளராக இருக்க வேண்டும். ( வாக்காளர் இடாப்பின் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது உறுதி செய்தல் வேண்டும். )

I ஆம் பகுதியில் சொல்லப்பட்ட தமிழ் மொழி மூல விஷேட பாடங்களுக்கு விண்ணப்பிக்கின்ற வேறு மாகாண விண்ணப்பதாரிகள் தமது வதிவை தத்தமது பிரதேச செயலாளரின் ஒப்பத்துடன் கூடிய கிராம சேவகரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் ஒன்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

**6. சேவை நிபந்தனைகள் :**

(i) அரச /மாகாண அரச சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.

(ii) இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

(iii) இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 03 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டாகும்.

(iv) வடமேல் மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

(v) 2014.01.20 ஆந் திகதி அ.நி.சு 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் ஊடக மொழிக்கு இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

(vi) வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் முதல் நியமனம் பெறும் மாவட்டத்தினுள் குறைந்த பட்சம் ஆறு வருடங்கள் சேவையாற்ற வேண்டும். வேறு மாகாணங்களை வதிவிடமாகக் கொண்டு நியமனம்

பெறுவோர் முதல் நியமனம் பெற்றுக் கொள்ளும் மாவட்டத்தினுள் குறைந்த பட்சம் 10 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

(vii) தமது முதல் நியமனம் பெறும் பாடசாலை கஷ்டப் பாடசாலை /அதி கஷ்டப் பாடசாலையாக இல்லாதவிடத்து தமது சேவைக்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது குறைந்த பட்சம் 05 வருடங்கள் கஷ்டப் பாடசாலை /அதி கஷ்டப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றுவதற்கு கடப்பாடுடையவராவார்.

7. **ஆட்சேர்ப்பு** :

7.1. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறைமை :

குருநாகல் மாவட்டத்தில் வசிப்பவர்கள் குருநாகல் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கும், புத்தளம் மாவட்டத்தில் வசிப்பவர்கள் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளில் உள்ள பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கும் மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தமிழ் மொழிமூல விசேட பாடங்களுக்கு தகைமை பெற்றவர்கள் போதியளவு இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஏனைய மாவட்டங்களின் விண்ணப்பதாரிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

தெரிவு செய்வதற்காக எழுத்து மூலப் பரீட்சை ஒன்று நடைபெறும். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் பாடங்களுக்கான வெற்றிடங்களின் அடிப்படையில் தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கும் செயன்முறைப் பரீட்சைக்கும் முன்னிருத்தப்பட்டு புள்ளிகளின் வரிசைக் கிரமத்தின் படி சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

7.2. எழுத்து மூலப் பரீட்சை - இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

| பாடம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது உளச் சார்பு ( 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவுப் பரீட்சை ( 01 மணித்தியாலம் ) | 100 | 40 |

பாடத் திட்டம் :

பாட இலக்கம் 01 – பொது உளச் சார்பு சோதனை :

விண்ணப்பதாரியின் திறன்கள், தர்கத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு அல்லது குறு விடை வினாக்கள் 50 ஐ உள்ளடக்கி இருக்கும். இந்த சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

பாட இலக்கம் 02 - பொது அறிவு :

சமூக, பொருளாதார, அரசியல் துறைகள் தொடர்பில் பொது அறிவைப் பரீட்சிக்கும் பல்தேர்வு வினாக்கள் 50 ஐக் கொண்டிருக்கும். ( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

7.3. பரீட்சை விதிமுறைகள் :

(i) இப்பரீட்சைக்கு சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் விண்ணப்பிக்கலாம்.

(ii) சகல விண்ணப்பதாரிகளும் இரண்டு ( 02 ) வினாப்பத்திரங்களுக்கு தோற்றுதல் வேண்டும்.

(iii) சகல விண்ணப்பதாரிகளும் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டியது ஒரே மொழி மூலத்திலாகும். அந்த மொழிமூலம் அவர் நியமனம் பெற எதிர்பார்க்கும் மொழிமூலமாக இருக்க வேண்டும்.

(iv) ஆங்கிலமொழிப் பாடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில மொழிமூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

(v) விண்ணப்பதாரிக்கு தன்னுடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டா.

7.4. நேர்முகப் பரீட்சை :

ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்கிறாரா என்பதைப் பரீட்சித்தல், உடல் தகைமை மற்றும் உளத் தகைமையைப் பரீட்சித்தல், பட்டம் வகுப்பு சித்தி மற்றும் மேலதிக தகைமைகள் என்பவற்றுக்கு புள்ளிகளை வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

( அ ) வகுப்புச் சித்திகளுக்காக புள்ளி வழங்கல் பின்வருமாறு அமையும். ( அதிக பட்சம் 07 புள்ளிகள் )

| | |
|---|---|
| I ஆம் வகுப்பு | 07 புள்ளிகள் |
| II ஆம் வகுப்பு உயர் | 05 புள்ளிகள் |
| III ஆம் வகுப்பு கீழ் | 03 புள்ளிகள் |

(ஆ) மேலதிக தகைமைகளுக்குப் புள்ளிகளை வழங்குதல் ( அதிக பட்சம் 10 புள்ளிகள் )

| தொ. இல. | நியதிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01 | தர்மப் பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது ஏனைய மதம் ஒன்றிற்கு அதற்குச் சமனான பரீட்சை ஒன்றில் சித்தி பெற்றமையை உறுதி செய்யும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் | 05 |
| 02 | விளையாட்டு, அழகியல் போன்ற இணைப் பாடவிதான செயற்பாடுகளில் அரசின் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போட்டி ஒன்றில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | 10 |

7.5. செயன்முறைப் பரீட்சை :

செயன்முறைப் பரீட்சையில் விண்ணப்பதாரி விண்ணப்பித்த பாடத்திற்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றின் கீழ் 05 நிமிடங்களுக்கு குறையாத நிகழ்த்துகை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இங்கு விண்ணப்பதாரியின் கருத்து வெளியீட்டு திறமை, தொடர்பாடல் திறமை தொடர்பில் விசேடமாக அவதானம் செலுத்தப்படும்.

**8. பரீட்சை நிலையம் :-**

மேற்படி போட்டிப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நடைபெறும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தான் வசிக்கும் மாவட்டத்திற்கு ஏற்ப நகரத்தை தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஏனைய மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தாம் நியமனம் பெற்றுக் கொள்ள விரும்பும் மாவட்டத்தை தெரிவு செய்ய வேண்டும்.

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | 01 |
| புத்தளம் | புத்தளம் | 02 |

**9. தெரிவு செய்யும் முறை :**

(அ) வடமேல் மாகாண அரச சேவையின் ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் தெரிவு செய்தல் நடைபெறும்.

(ஆ) எந்தவொரு பாடத்திற்கும் / பாடங்களிற்கும் ஒரு மாவட்டத்தில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு முடிவடைந்த பின்னரும் வெற்றிடங்கள் காணப்படுமாயின் அந்தந்த பாடங்களுக்கு விண்ணப்பித்த மற்றைய மாவட்ட விண்ணப்பதாரிகளில் இருந்து முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

I ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ் மொழி மூல விசேட பாடங்கள் தொடர்பில் இரண்டு மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகள் இல்லாதபோது மாத்திரம் ஏனைய மாகாண விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

(இ) ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி இரண்டு ( 02 ) அல்லது மூன்று ( 03 ) பாடங்களுக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நியமனம் வழங்கும் பாடம் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு தீர்மானம் எடுக்கும்.

**10. பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 600.00 ஐ வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்தில் செலுத்தி தன்னுடைய பெயரில் பெற்றுக் கொள்ளும் வமே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

தமிழ் மொழி மூல விசேட பாடங்களுக்கு வேறு மாகாணங்களில் இருந்து குருநாகல் மாவட்டத்திற்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் குருநாகல் பிரதேச செயலகத்திலும், புத்தளம் மாவட்டத்திற்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் புத்தளம் மாவட்டத்திற்கும் பணத்தை செலுத்தி வமே.மா.ச.நி 2பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

வமே.மா.ச.நி. 2 பற்றுச் சீட்டினைத் தவிர வேறு நிறுவனங்களில் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள், காசு என எவையும் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன், எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும். ( பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றை எதிர் கால பயன்பாட்டுக்காக தம்வசம் வைத்துக் கொள்ளலாம்.)

**11. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

11.1. ( அ ) விண்ணப்பங்கள் A4 ( 21 x 29 செ.மீ. ) அளவுள்ள தாள்களைப் பயன்படுத்தி 01 தொடக்கம் 06 வரை முதலாவது பக்கத்திலும் இலக்கம் 07 இலிருந்து மற்றைய பக்கங்களிலும் உள்ளடங்குமாறு விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

( ஆ ) மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள், அடிப்படைத் தகைமை பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்ததா என்பது தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்த வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம்.

( இ ) விண்ணப்பித்த பாடம் / பாடங்கள் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது என்பதுடன், ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பம் மாத்திரமே முன்வைக்க முடியும்.

( ஈ ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.01.14 ஆகும்.

11.2. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி,நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் அல்லது ரூ. 32,960.00 இக்கு மேற்பட்ட ஆரம்ப

அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

11.3. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2019.01.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். இத்திகதியின் பின்னர் எந்த ஒரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

11.4. முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி 2019.01.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு வழங்கப்படும். ஆனாலும் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படலானது மேற்கூறிய தகைமைகளை பூர்த்தி செய்தமையை ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படமாட்டாது.

**12. விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களின் போதும் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்

( அ ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
அல்லது
( ஆ ) செல்லுபடியான கடவுச் சீட்டு /செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தி ஒருவர் தன்னுடைய ஆளடையாளத்தை உறுதி செய்யத் தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

13. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கபடமாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரி பொய்யான தகவல்களை வழங்கி இருக்கிறார் என்றோ அல்லது உண்மையான தகவல்கள் வேண்டும் என்றே மறைக்கப்பட்டிருக்கின்றது என்றோ தெரிய வந்தால் அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

14. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை கால அட்டவணையுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் விடுக்கப்படும். பரீட்சை அறிவித்தல் வெளியிடப்பட்டு 03 நாட்கள் கழிந்த பின்னரும்

பரீட்சை அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக 'செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்' என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது பின்வரும் விபரங்களை வழங்க வேண்டும்.

(i) பரீட்சையின் பெயர்:
(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :
(iii) முகவரி :
(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
(v) விண்ணப்பத்தை தபாலிலிட்ட அலுவலகம், பதிவு எண், அனுப்பிய திகதி :
(vi) விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் :

15. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் தொடர்பில் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கருதப்படும்.

16. இந்தப் பரீட்சையை நடாத்துதல், பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் அல்லது தெரிவு செய்யாமல் விடுதல் வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

17. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2018.12.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக உபயோகத்திற்காக | |
|---|---|

**வடமேல் மாகாண மாகாணப் பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) தரத்தின் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018**

1. நிரந்தர வதிவு :

| வடமேல் மாகாணத்தினுள் வசிப்பவராயின் | | ஏனைய மாகாணங்களில் வசிப்பவராயின் ( தமிழ் மொழி மூல விசேட பாடங்களுக்கு மாத்திரம் ) | |
|---|---|---|---|
| நிரந்தர வதிவு மாவட்டம் | | நிரந்தர வதிவு மாகாணம் | |
| நகர இலக்கம் | | விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் மாவட்டம் | |
| | | நகர இலக்கம் | |

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - S, தமிழ் -T, ஆங்கிலம் - E ☐
( நியமனம் பெற்றுக் கொள்ள உத்தேசிக்கும் மொழி மூலத்திற்கு உரிய எழுத்தை கூட்டினுள் எழுதுக. )

3.

| விண்ணப்பிக்கும் பாடம் /பாடங்கள் | விடய இலக்கம் |
|---|---|
| | |
| | |
| | |

( விண்ணப்பிக்கக்கூடிய பாடங்களின் உச்ச எண்ணிக்கை 03 ஆகும் )

4. 4.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம் /தமிழில் ) :- ..............................................................

4.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) :- ..............................................................

4.3. முழுப் பெயர் ( சிங்களம் /தமிழில் ) :- ..............................................................

4.4. முழுப் பெயர் ( ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) :- ..............................................................

5. 5.1. தற்போதைய முகவரி (சிங்களம் /தமிழில் ) :- ..............................................................

( பரீட்சை அனுமதிச் அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும் )

5.2. தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் ) :- ..............................................................

5.3. வதியும் பிரதேச செயலாளர் பிரிவு :- ............................ கிராம அலுவலர் பிரிவு :- ................................

5.4. தொலைபேசி இலக்கம் :- ..................................................

6. 6.1. தேசிய ஆள் அளடையாள அட்டை இல. :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

( உரிய கட்டத்தினுள் எழுதவும் )

6.2. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது :-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6.3. பால் :- ஆண் - M ☐ பெண் - F ☐

( உரிய எழுத்தினை கூட்டினுள் எழுதுக )

6.4. விவாக அந்தஸ்து:- திருமணமாகாதவர் - 1 ☐

திருமணமானவர் - 2 ☐

( உரிய எழுத்தினை கூட்டினுள் எழுதுக )

**7. பெற்றுக் கொண்டுள்ள பட்டம் தொடர்பான விபரம் :-**

7.1. பட்டம் :- ....................................................................................................................

7.2. பட்டம் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகம் :- ..............................................................................

7.3. பட்டத்திற்காக பயின்ற பிரதான பாடம் /பாடங்கள் :-

| |
|---|
| |
| |
| |
| |
| |

7.4. பெற்றுக் கொண்ட வகுப்பு :- .......................................................................

7.5. பட்டம் செல்லுபடியாகும் திகதி :- .......................................................................

7.6. பட்டம் பயின்ற மொழி மூலம் :- .......................................................................

7.7. க. பொ. த ( சா./த. )

| | சித்தியடைந்த ஆண்டு | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |

| | பாடங்கள் | முதலாம் தடவை தரம் | இரண்டாம் தடவை தரம் |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |
| 04 | | | |
| 05 | | | |
| 06 | | | |
| 07 | | | |
| 08 | | | |
| 09 | | | |
| 10 | | | |

7.8. க. பொ. த. ( உ. /த. )

சித்தியடைந்த ஆண்டு :-.....................

பரீட்சை சுட்டெண் :-.....................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

**8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் விபரம் :**

8.1. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் :- .....................................................

8.2. பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதியும் :- ............................................................................

8.3. செலுத்திய கட்டணம் :- ................................................

| |
|---|
| பற்றுச் சீட்டு கழறாதவாறு இங்கு ஒட்டவும்<br>( பற்றுச் சீட்டின் நிழற் பிரதி ஒன்றை தம் வசம் வைத்துக் கொள்ளவும் ) |

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலும் நம்பிக்கையின் படியும் உண்மையானவையும் சரியானவையும் என தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியில் பூரணப்படுத்தப்படாமல் /பிழையாக நிரப்பப்படுவதால் ஏற்படும் இழப்பை ஏற்றுக் கொள்கிறேன். மேலும் இதன் சகல பகுதிகளையும் சரியாக பூரணப்படுத்தியுள்ளேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் இவ்வுறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் நியமனத்திற்கு முன்னரே தகுதியற்றவனாவேன் என்பதை நான் அறிவேன். நான் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தெரிய வந்தால் நான் பணி நீக்கத்துக்கு உட்படுத்தப்படுவேன் என்பதை அறிவேன்.

(இ) பரீட்சைக் கட்டணத்துக்குரிய பணம் பிரதேச செயலகத்தில் செலுத்தப்பட்டு பெறப்பட்ட அதன் பற்றுச் சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் / வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு விதிக்கும் சட்ட திட்டங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

(ஈ) இதில் வழங்கப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

திகதி :- ........................ ....................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................... என்பவரை எனக்கு தனிப்பட் முறையில் தெரியும் எனவும், அவர் எனது முன்னிலையில் .................................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், பற்றுச் சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :- ...............................................

பதவி :-...............................................

முகவரி :- ...............................................

திகதி :- ...............................................

( உத்தியோகபூர்வ முத்திரையை பதியவும் )

**உப பட்டியல்**

ஒவ்வொரு மாவட்டத்தினதும் வெற்றிடமாகவுள்ள பாடங்கள் மொழி மூலத்தின் அடிப்படையில் ( ✓ ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ளன. அந்தக் குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள பாடங்களை மாத்திரம் அந்தந்த மாவட்டங்களுக்குத் தெரிவு செய்ய வேண்டும்.

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | வெற்றிடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| **ஆரம்பப் பிரிவு ( 1- 5 )** | | | | | | | | |
| ஆரம்பப் பிரிவு | 1 | முழுக் கற்கைக் காலத்திலும் சிங்களம்/தமிழ் பாடம் அல்லது சிங்கள /தமிழ் மொழியியலை பிரதான பாடமாகக் கற்று பெற்றுக் கொண்ட இளமாணிப் பொது அல்லது விசேட பட்டம்<br>அல்லது<br>ஏதேனும் ஒரு கலைமானிப் பட்டத்துடன் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் தமிழ் /சிங்கள பாடத்திற்கு திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | √ | – | √ | √ | – |
| விசேடகல்வி | 2 | முழுக் கற்கைக் காலத்திலும் உளவியல், மொழியியல், சிங்களம்/ தமிழ் பாடம் தத்துவம் ஆகிய ஏதேனும் ஒரு பாடத்தைக் கற்று பெற்றுக் கொண்ட இளமாணிப் பொது அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>விசேட கல்வியை பாடமாகக் கொண்ட கலைமானி விசேட அல்லது பொதுப்பட்டம் | √ | – | – | √ | – | – |
| **க.பொ.த (சா.தரம்) இரண்டாம் நிலைப் பிரிவு** | | | | | | | | |
| கணிதம் | 3 | கணிதத்தை பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி / பிரயோக விஞ்ஞான பொது அல்லது விசேட பட்டம் மற்றும் உயர் தரத்தில் இணைந்த கணிதப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.<br>அல்லது<br>ஏதேனும் ஒரு பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த ( உயர் தரப் ) பரீட்சையில் கணிதம் / இணைந்த கணித பாடத்திற்கு திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | √ | √ | √ | √ | √ |

**உப பட்டியல்** *(தொடர்ச்சி)*

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | வெற்றிடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| விஞ்ஞானம் | 4 | உயிரியல் / இரசாயனவியல் / தாவரவியல் / விலங்கியல் / பௌதீகவியல் ஆகிய பாடங்களில் ஒன்றைக் கொண்ட விஞ்ஞானமாணி அல்லது பிரயோக விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.<br>அல்லது<br>ஏதேனும் ஒரு பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. ( உயர்தரப் ) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல். | √ | √ | – | √ | √ | – |
| சிங்களம் / தமிழ் (முதலாம் மொழி) | 5 | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் சிங்களம் அல்லது தமிழ் அல்லது மொழியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமாணி பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | – | √ | √ | – |
| ஆங்கிலம் | 6 | முழுக் கற்கைக் காலத்திலும் ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம் அல்லது ஆங்கில மொழியியலை பிரதான பாடமாகக் கற்று பெற்றுக் கொண்ட கலைமானிப் பொது அல்லது விசேட பட்டம்<br>அல்லது<br>ஆங்கில மொழி தொடர்பான கல்விமானிப் பட்டம். | – | – | √ | – | – | √ |
| வரலாறு | 7 | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் வரலாறு / தொல்லியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமாணி பொது அல்லது விசேட பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| புவியியல் | 8 | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் புவியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமாணி பொது அல்லது விசேட பட்டம் | √ | √ | √ | √ | √ | √ |
| வணிகக் கல்வியும் கணக்கீடும் | 9 | வணிக நிர்வாகமாணி / விஞ்ஞானமாணி (முகாமைத்துவம்) / வணிக முகாமைத்துவமாணி / கணக்கீடு தொடர்பான பொது அல்லது விசேட பட்டம்<br>அல்லது<br>பிரதான பாடமாக வணிகக் கல்வி மற்றும் கணக்கீட்டைக் கொண்ட கலைமானி அல்லது விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | – | √ | √ | – |

**உப பட்டியல்** *(தொடர்ச்சி)*

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | வெற்றிடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| சித்திரம் | 10 | சித்திரப் பாடத்தை உள்ளடக்கிய கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணி / நுண்கலைமாணி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த ( உ.த ) இல் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். | √ | √ | – | √ | √ | – |
| நடனம் | 11 | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் நடனத்தை ஒரு பாடமாக உள்ளடக்கி பெற்றுக் கொண்ட கலைமாணி / கவின் கலைமாணி பொது அல்லது விசேட பட்டம்<br><br>அல்லது<br><br>நடனத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைமாணிப் பட்டத் துடன் க.பொ.த ( உ.த ) பரீட்சையில் நடனப் பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல். | √ | – | – | √ | √ | – |
| கீழைத்தேய இசை | 12 | முழு கற்கைக் காலத்தினுள்ளும் கீழைத்தேய சங்கீதத்தை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கவின் கலைமாணி / அரங்கியல் தொடர்பான கலைமாணி /கலைமாணி பொது அல்லது விசேட பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| குடியுரிமைக் கல்வி | 13 | சமூகவியல் /அரசியல் /புவியியல் /வெகுசனத் தொடர்பாடல் / தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும் / வரலாறு / பொருளியல் ஆகிய பாடங்கள் அல்லது இவற்றில் கலவையிலான ஏதேனுமொரு கலைமாணிப் பட்டம் | √ | √ | √ | √ | √ | √ |
| விவசாயமும் உணவுத் தொழில் நுட்பவியலும் | 14 | விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் / விவசாயம் உணவுத் தொழில் நுட்பவியல் ஆகிய பாடங்களைக் கொண்ட விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| தகவல் தொழில் நுட்பம் | 15 | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் ஆகியவற்றை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பொது அல்லது விசேட பட்டம்<br><br>மொத்த கற்றல் காலத்தினுள்ளும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞானம் ஆகியவற்றை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணி பொது அல்லது விசேட பட்டத்துடன் க.பொ.த. ( உயர்தரப் ) பரீட்சையில் விஞ்ஞானம் / கணித துறையின் பாடங்கள் மூன்றில் சித்தியடைந்திருத்தல். | √ | √ | – | √ | √ | – |

**உப பட்டியல்** *(தொடர்ச்சி)*

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | வெற்றிடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| சுகாதாரமும் உடற் கல்வியும் | 16 | விளையாட்டியல் மற்றும் முகாமைத்துவம் / உடற் கல்வி தொடர்பான விசேட பட்டம்<br><br>அல்லது<br><br>விளையாட்டு மற்றும் மனமகிழ் முகாமைத்துவம் தொடர்பிலான விசேட கலைமாணிப் பட்டம். | √ | √ | – | √ | √ | – |
| இரண்டாம் மொழி ( தமிழ் ) | 17 | தமிழ் மொழி மூல பொது அல்லது விசேட கலைமாணிப் பட்டத்துடன், க.பொ.த ( சா.த ) பரீட்சையில் இரண்டாம் மொழி ( சிங்கள ) பாடத்திலும், க.பொ.த ( உ.த ) பரீட்சையில் தமிழ் பாடத்திலும் சித்தி பெற்றிருத்தல். | √ | – | – | √ | – | – |
| இரண்டாம் மொழி ( சிங்களம் ) | 18 | சிங்கள மொழி மூல பொது அல்லது விசேட கலைமானிப் பட்டத்துடன், க.பொ.த ( சா.த ) பரீட்சையில் இரண்டாம் மொழி ( தமிழ் பாடத்திலும், க.பொ.த ( உ.த ) பரீட்சையில் சிங்கள பாடத்திலும் சித்தி பெற்றிருத்தல். | – | √ | – | – | √ | – |
| நூலகக் கற்கைகள் | 19 | நூலக மற்றும் தகவல் தொடர்பான பட்டம்<br><br>அல்லது<br><br>மொத்த கற்றல் காலத்திலும் நூலகக் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட பொது அல்லது விசேட கலைமாணிப் பட்டம். | √ | √ | – | – | √ | – |
| புத்த சமயம் | 20 | பௌத்த தத்துவவியல் / பௌத்த நாகரீகம் / பௌத்த சமயம் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண் டுள்ள பொது அல்லது விசேட கலைமாணிப் பட்டம். | √ | – | – | √ | – | – |
| இந்து சமயம் | 21 | இந்து தத்துவம் / இந்து நாகரிகம் / இந்து சமயம் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | – | √ | – | √ | – | – |
| கத்தோலிக்க சமயம். | 22 | தேவ தர்மம் / கிறிஸ்தவ நாகரீகம் / கிறிஸ்தவ கலாசாரம் தொடர்பான பொது அல்லது விசேட கலைமாணிப் பட்டம். | √ | – | – | √ | √ | – |
| இஸ்லாம் | 23 | இஸ்லாமிய தத்துவவியல் / இஸ்லாமிய நாகரீகம் / இஸ்லாமிய சமயம் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்டுள்ள பொது அல்லது விசேட கலைமாணிப் பட்டம். | – | √ | – | – | √ | – |

**உப பட்டியல்** *(தொடர்ச்சி)*

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | வெற்றிடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| | | **க.பொ.த உயர் தரம் ( 12 - 13 )** | | | | | | |
| சிங்களம் / தமிழ் | 24 | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் சிங்கள / தமிழ் அல்லது சிங்கள / தமிழ் மொழியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணி பொது அல்லது விசேட பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| ஆங்கில மொழி | 25 | முழுக் கற்கைக் காலத்திலும் ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம் அல்லது ஆங்கில மொழியியலை பிரதான பாடமாகக் கற்று பெற்றுக் கொண்ட கலைமாணி அல்லது தொழில்நுட்பமாணி பொது அல்லது விசேட பட்டம்.<br>அல்லது<br>ஆங்கில மொழி தொடர்பான கல்விமாணிப் பட்டம். | – | – | √ | – | – | √ |
| அரசியல் | 26 | அரசியல் தொடர்பான விசேட கலைமாணி பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| வரலாறு | 27 | வரலாறு / தொல்லியல் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம். | √ | – | – | √ | – | – |
| நாடகமும் அரங்கியலும் | 28 | நாடகமும் அரங்கியலும் பாடம் தொடர்பான விசேட கவின் கலைமாணி / அரங்கியல் தொடர்பான கலைமாணி விசேட பட்டம் | √ | – | – | √ | – | – |
| புவியியல் | 29 | புவியியல் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| அளவையியல் | 30 | அளவையியில் / தத்துவம் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | √ | – | – | √ | – | – |
| வெகுசன தொடர் பாடலும் ஊடகக் கல்வியும் | 31 | வெகுசனத் தொடர்பாடல் / தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடம் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | √ | – | – | √ | – | – |
| பொருளியல் | 32 | பொருளியல் தொடர்பான விசேட பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| பௌத்த நாகரிகம் | 33 | பௌத்த தத்துவம் / பௌத்த நாகரிகம் / பௌத்த சமயம் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | √ | – | – | √ | √ | – |
| இந்து நாகரிகம் | 34 | இந்து தத்துவம் / இந்து நாகரிகம் / இந்து சமயம் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | – | √ | – | – | √ | – |

**உப பட்டியல்** *(தொடர்ச்சி)*

| பாடம் | பாட இலக்கம் | கல்வித் தகைமை | வெற்றிடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| கிறிஸ்தவ தர்மம் | 35 | கிறிஸ்தவ கலாசாரம் /கிறிஸ்தவ நாகரிகம் /தேவ சமயம் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | √ | – | – | √ | √ | – |
| இல்லாமிய நாகரிகம் | 36 | இஸ்லாமிய தத்துவம் /இஸ்லாமிய நாகரிகம் / இஸ்லாம் சமயம் தொடர்பான விசேட கலைமாணிப் பட்டம் | – | √ | – | – | √ | – |
| வணிகக் கல்வி | 37 | வணிகக் கல்வி /வணிகவியல் ஆகிய ஒன்றைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட வணிகமாணி / வணிக நிர்வாகமானி / விஞ்ஞானமானி வணிக முகாமைத்துவமாணி விசேட பட்டம் | √ | – | – | √ | √ | – |
| கணக்கீடு | 38 | கணக்கீடு தொடர்பான விசேட பட்டம்.<br><br>அல்லது<br><br>கணக்கீட்டை பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட வணிக நிர்வாகமாணி /வணிக முகாமைத்துவமாணி / வணிகமாணி விசேட பட்டம் | √ | √ | – | √ | √ | – |
| விவசாயம் | 39 | விவசாயம் /விவசாய தொழில்நுட்பமும் முகாமைத் துவமும் தொடர்பான விசேட பட்டம். | √ | √ | – | √ | – | – |
| இணைந்த கணிதம் | 40 | தூய கணிதம் /பிரயோக கணிதம் /உயர் கணித பாடங்களைக் கற்று பெற்றுக் கொண்ட பொது அல்லது விசேட பட்டத்துடன், க.பொ.த (உ.த) பரீட்சையில் இணைந்த கணித்தில் சித்தியடைந்திருத்தல். | √ | √ | – | √ | √ | – |
| பௌதீகவியல் | 41 | பௌதீகவியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்டுள்ள விஞ்ஞானமானி அல்லது பிரயோக விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | – | √ | √ | – |
| உயிரியல் | 42 | உயிரியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்டுள்ள விஞ்ஞானமாணி அல்லது பிரயோக விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | – | √ | √ | – |
| இரசாயனவியல் | 43 | இரசாயனவியலைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்டுள்ள விஞ்ஞானமாணி அல்லது பிரயோக விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | – | √ | √ | – |
| தொழில் நுட்பத் திற்காக விஞ்ஞானம் | 44 | பௌதீகவியலை பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம் | √ | – | – | √ | – | – |

**உப பட்டியல்** *(தொடர்ச்சி)*

| *பாடம்* | *பாட இலக்கம்* | *கல்வித் தகைமை* | *வெற்றிடங்கள்* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | *குருநாகல்* | | | *புத்தளம்* | | |
| | | | *சிங்களம்* | *தமிழ்* | *ஆங்கிலம்* | *சிங்களம்* | *தமிழ்* | *ஆங்கிலம்* |
| உயர் முறைமைத் தொழில்நுட்பவியல் | 45 | உயிர் முறைமை /விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும் / சூழலியல் /விவசாய விஞ்ஞானம் /கனிய வள தொழில் நுட்பவியல் ஆகிய பாடக் கலவையில் பெற்றுக் கொண்ட விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம். பொறியியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் / பொறியியல் தொழில்நுட்பவியல் பட்டம் /நனோ தொழில் நுட்பவியல் தொடர்பான பொறியியல் தொழில்நுட்ப பட்டம் / விஞ்ஞானமாணி ( அளவை விஞ்ஞானம்) பட்டம் / தொழில்நுட்பமாணி (விஞ்ஞானமும் தொழில்நுட்ப வியலும் ) தொடர்பான பட்டம் ஒன்று அல்லது கீழ்வரும் தகைமைகள். | √ | – | – | √ | – | – |
| பொறியியல் தொழில் நுட்பவியல் | 46 | சிவில் பொறியியல் /மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம்<br>*அல்லது*<br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் க.பொ.த (உ.த.) பரீட்சையில் கணிதம் /பொறியியல் தொழில்நுட்ப துறையில் கற்று மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.<br>*அல்லது*<br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் க.பொ.த பொறியியல் தொழில் நுட்பவியல் ( சிவில் எந்திரவியல் /மின்னியல் மற்றும் இலத்திரனியல் ) துறையில் NVQ - 5 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைக் கொண்டிருத்தல். | √ | – | – | √ | – | – |

*12 - 522/5*